Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

04.05.2020 திங்கட்கிழமை



## கொரோனா பலி 250,000!

வுகான், மே 4

கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 2 லட்சத்து 50 ஆயிரத்தை நெருங்குகின்றது. உலகின் 210 நாடுகளில் ஆதிக்கம் செலுத்திவரும் கொரோனாவால் அன்றாடம் பல்லாயிரம் உயிரிழப்புக்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள்

2

# நாடாளுமன்றைக் கூட்டினால் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்

## ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனக் குறிப்பிட்டு மஹிந்தவிடம் சம்பந்தன் அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, மே 4

நாட்டின் பிரச்சினைகள் தீர ஒத்துழைப்பை ஆதரவை வழங்க நாங்கள் தயார். ஆனால் அதற்கு நாடாளுமன்றம் மீளக்கூட்டப்பட வேண்டும். அதன் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறலாம் என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

2



## கடற்படை வீரரின் தந்தைக்கு கொரோனா

வவுனியா, மே 4

வவுனியா பம்பைமடு கொரோனா தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த கடற்படை வீரர் ஒருவரின் தந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது

2

## வீதியோரம் இருந்து கைக்குண்டு மீட்பு

கொக்குவில், மே 4

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியிலிருந்து கைக்குண்டு ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையிலேயே யாழ்ப்பாணம் கொக்குவில் ஆடியபாதம் வீதியோரமாக இருந்து இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-114)

## பாடசாலைகள் விரைவில் ஆரம்பம்!

*மாகாண மட்டத்தில் ஆராய்வு*

கொழும்பு, மே 4

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி தீர்மானிக்கப்பட்ட பின்னர் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான செயல்முறைத் திட்டத்தை வகுப்பது தொடர்பாக மாகாண மட்டத்தில் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்

2

## சட்டத்துக்கு அமைய தேர்தல் நடத்தலாம்!

*சட்டமா திணைக்களம் தெரிவிப்பு*

கொழும்பு, மே 4

இலங்கையிலுள்ள சட்டத்துக்கு அமையவே நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது ஏற்புடையது என சட்டமா அதிபர் திணைக்களம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது. மார்ச் 19 ஆம் திகதி முடிவடைந்த நாடாளுமன்

2

## தனக்குத் தானே தீவைத்து தந்தை உயிர் மாய்ப்பு

*ஊரடங்கால் பிள்ளைகளை பார்க்க முடியாத மன விரக்தி!*

கிளிநொச்சி, மே 4

தவறான முடிவெடுத்துத் தனக்குத் தானே தீ வைத்து, நான்கு பிள்ளைகளின் தந்தை உயிர் மாய்த்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளதால் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது பிள்

2

## குணமானார் முதல் சிப்பாய்

கொழும்பு, மே 4

கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட முதலாவது கடற்படைச் சிப்பாய் குணமடைந்து நேற்று முன்தினம் வீடு திரும்பினார் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

2

## கொரோனா பாதிப்பு 187 பேர் குணமடைவு; 524 பேர் சிகிச்சையில்

கொழும்பு, மே 4

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 03 பேர் இன்று குணமடைந்துள்ளனர். அதற்கமைய கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்து வீடு சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 187ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 718 பேரில் தற்போது 524 நோயாளிகள் 7 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் 117 பேரும், வெலிகந்தை ஆதார வைத்தியசாலையில் 54 பேரும், முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் 81 பேரும், இரணவில வைத்தியசாலையில் 17 பேரும், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் 59

2

## தீயில் எரிந்தது வீடு!

### 3 பிள்ளைகளுடன் குடும்பம் நிர்க்கதி மன்னாரில் சோகம்

மன்னார், மே 4

மன்னார் எமில் நகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஜிம்றோன் நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்று தீயில் எரிந்து அழிந்துள்ளது. சொந்த வீடு, அத்தியாவசியப் பொருள்கள் ஏதுமின்றி அந்தக் குடும்பம் நிர்க்கதியானது. இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை நண்பகல் இடம்பெற்றது. கணவன் கடற்தொழிலுக்கு சென்றிருந்த

2



# நாடாளுமன்றைக் கூட்டினால்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தின் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரின் பெயரில் இந்தக் கூட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தக் கூட்டு அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலும் ஏனைய அரசியல் கட்சிகளாலும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைக்கான பதில் இதுவரை எதிர்மறையான தாகவே உள்ளது.

இந்தப் பின்னணியில், பிரதமர் மஹிந்த ராஜபக்ச கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் இன்று அலரி மாளிகையில் கூட்டமொன்றுக்கு அழைத்துள்ளார்.

பின்வரும் காரணிகளின் காரணமாக நாடும் மக்களும் மிகவும் நெருக்கடியான நிலைமையில் உள்ளனர்: உலகளாவிய கொள்ளை நோய் கொரோனா வைரஸ் படிப்படியாக மோசமடைந்து வருகின்றது. எமது நாட்டிலிருந்து அதனை முழுமையாக ஒழிப்பதற்கு இன்னும் அதிகமான வேலைகள் செய்யப்பட வேண்டும். பாரதூரமான விளைவுகளோடு அது மேலும் மோசமடையும் என்ற நியாயமானதோர் அச்சம் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. இது தொடர்பாக நாட்டின் ஒன்றிணைந்த முயற்சிகள் தேவை.

1994ஆம் ஆண்டிலிருந்து கடந்த 25 ஆண்டுகளாக ஐந்து நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதி பதவிக் காலங்களில் நடைபெற்ற அனைத்துத் தேசிய தேர்தல்களிலும் மக்கள் தமது இறைமையை - தமது வாக்குரிமையைப் பிரயோகித்து 1978 ஆம் ஆண்டு அரசமைப்பை நிராகரித்துள்ளதோடு, அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகிய தமது இறைமையின் ஆட்சி அதிகாரங்களின் மூன்று அம்சங்களையும் சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித் துறை அதிகாரங்கள் உள்ளடக்கி புதிய அரசமைப் பொன்றை நிறைவேற்றுவதற்கான ஆணையை வழங்கியுள்ளனர். தமது இறைமையைப் பிரயோகித்து மக்கள் வழங்கிய இவ்வாணை நிறைவேற்றப்படாததோடு, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக மக்களால் நிராகரிக்கப்பட்டு வரும் ஓர் அரசமைப்பின் கீழேயே நாடு தொடர்ந்து ஆளப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றம் பிரதானமாக மூன்று விடயங்களைக் கையாண்டு அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, நாடாளுமன்றத்துக்கான தேர்தல் சீர்திருத்தங்கள், தேசிய பிரச்சினையான தமிழர் பிரச்சினை ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றைக் கையாண்டு புதிய அரசமைப்பொன்றைத் தயாரிப்பதற்கு ஒரு வழிநடத்தல் குழு மற்றும் பல்வேறு விடயங்களுக்குப் பொறுப்பான உப குழுக்கள் மற்றும் ஒரு வல்லுநர் குழு ஆகியவற்றோடு அரசமைப்புச் சபை என்ற பெயரில் தன்னை ஒரு முழு நாடாளுமன்றக் குழுவாக மாற்றுவதற்கு ஒருமனதாகத் தீர்மானித்தது.

ஆரம்பிக்கப்பட்ட பல குழுக்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்துவம் வகித்தன. அங்கு பெருமளவு கருத் தொருமைப்பாடு நிலவியது; குழுக்களின் அறிக்கைகள் அரசமைப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. நாடாளுமன்றம் கலைக்கப்படும்வரை இந்த நடைமுறை தடைப்படாதபோது, அது இறுதிக் கட்டத்தை அடைந்திருந்தது.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் தேசிய பிரச்சினையானது, அனைத்து அரசியல் கட்சிகளினாலும் 1991ஆம் ஆண்டிலிருந்து அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகளினாலும் கையாளப்பட்டு வந்துள்ளது; அதில் பெருமளவு முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினை எவ்வாறு கையாளப்பட்டு ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு வழியில் எவ்வாறு தீர்த்து வைக்கப்படும் என்பது தொடர்பாக நாட்டுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பகிரங்க வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய வாக்குறுதிகளின் அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்பட்டது. தேசிய சமாதானத்தின் நலனுக்காகவும், பிராந்திய அமைதியின் நலனுக்காகவும் உலக சமாதானத்தின் நலனுக்காகவும் இவ்வாக்குறுதிகள் காப்பாற்றப்படவேண்டும். இல்லையேல், பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்குத் துரோகமிழைப்பதற்காக சர்வதேச சமூகமும் ஏமாற்றப்பட்டதாகவே தோன்றும்.

மேலே விபரிக்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்பதாலும், நாட்டின் நலனுக்காகவும் அதன் மக்களின் நலனுக்காகவும் இந்த விடயங்கள் அனைத்தையும் நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான ஒரு முறையில் தீர்த்து வைப்பதற்கு எமது ஆதரவை வழங்க நாம் தயாராக உள்ளோம் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதற்காகவும் பிரதமருடனான இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவேண்டும் என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

நீங்கள் அழைப்பு விடுத்திருக்கும் இந்தக் கூட்டம் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கான ஒரு மாற்றீடாக அமையாது, அமையவும் முடியாது என்பதை நாம் அழுத்தம் திருத்தமாக அறிவிக்க விரும்புகின்றோம். எமது கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது தோன்றியுள்ள பல அரசமைப்பு மற்றும் சட்டப் பிரச்சினைகளைக் கையாளுவதற்காக நாடாளுமன்றம் மீளக் கூட்டப்படவேண்டும் என்றும், நாடாளுமன்றத்தால் மட்டுமே அவற்றைக் கையாள முடியும் என்றும் நாம் உறுதியான கருத்தைக் கொண்டிருக்கின்றோம் - என்றுள்ளது. (எ-22)

# சட்டத்துக்கு...

றத் தேர்தல் வேட்புமனுக் காலத்தில் விசேட பொது விடுமுறை அறிவிக்கப்பட்டமையால் அதன் தாக்கங்கள் தொடர்பாக ஆணைக்குழு ஒரு கருத்தைக் கோரியிருந்தது. பொதுத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் கடந்த மார்ச் 12ஆம் திகதி வியாழக்கிழமை முதல் மார்ச் 19 ஆம் திகதி வியாழக்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. 12 மற்றும் 13 வியாழன், வெள்ளிக்கிழமைகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன. 14 மற்றும் 15 ஆம் திகதிகள் சனி, ஞாயிறு விடுமுறை நாள்கள். எனினும் கொரோனா நெருக்கடி ஆரம்பமானதால் 16ஆம் திகதி திங்கட்கிழமையன்று பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் 17, 18 மற்றும் 19ஆம் திகதிகளில் செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால், குறித்த தினங்களை பொதுவிடுமுறை தினமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வர்த்தகமானி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பது இப்போதுதான் தங்களுக்குத் தெரியவந்திருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். சட்டப்படி வேட்புமனுக்கள் தாக்கலுக்கு வழங்கப்பட்ட நாள்களில் நான்கு நாள்கள் அதுவும் கடைசி நான்கு தினங்களும் பொதுவிடுமுறைகளாகும். அத்தகைய பொது விடுமுறை தினத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் சட்டரீதியானவையா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து ஆணைக்குழு சட்டமா திணைக்களத்திடம் சட்ட வியாக்கியானங்களை கோரியிருந்தார். நாட்டின் சட்டத்துக்கு அமைய நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (எ-22)

# தீயில் எரிந்தது...

நிலையில் மணைவி சமைத்துக் கொண்டிருந்த பொழுது திடீரென வீடு தீப்பற்றியது என்று தெரிவிக்கப்பட்டது. அயலவர்கள் மற்றும் நகர சபையின் தண்ணீர் பவுசரின் உதவியுடன் தீ அணைக்கப்பட்ட போதும் கற்கல் அடுக்கப்பட்டு ஓலையால் மேயப்பட்ட வீடு என்பதால் அந்த வீடு முற்றாக எரிந்தது. இந்தச் சம்பவத்தால், மூன்று பிள்ளைகளைக் கொண்ட அந்தக் குடும்பம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. வீடு மாத்திரம் அல்லாமல் பாவனைக்கு என ஆடைகளோ அத்தியாவசிய உணவுப் பொருள்களோ இன்றிக் காணப்படுகின்றனர். (ப-56)

# கொரோனா பலி...

ஒவ்வொரு நாளும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நேற்று மட்டும் சுமார் 3 ஆயிரத்தை 500 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் உலக அளவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 49 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இன்று நள்ளிரவுக்குள் இந்த எண்ணிக்கை 2 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# பாடசாலைகள் விரைவில்

துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் எச். எம் சித்ரானந்த தெரிவித்துள்ளதாவது, இந்த விடயம் தொடர்பில் தெற்கு, வட மத்திய மற்றும் வடமேற்கு மாகாண கல்வி அதிகாரிகளுடனான கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளன. ஊவா வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாண அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் பாடசாலைகளுக்கான விசேட நேர அட்டவணை தயாரிக்கப்படும்.

முதல் கட்டத்தில் தரம் 10 வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் . இதனைத்தொடர்ந்து தரம் 13 வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது- என்றார். (சு)

# கடற்படை வீரரின்....

உறுதி செய்யப்பட்டுள்ளது. வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 200 க்கும் மேற்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தப்படுத்தப்பட்டு வருகின்றனர். வவுனியா பம்பைமடு முகாமுக்கு கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 216 பேர் அண்மையில் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்த நிலையில் அங்கு தங்கவைக்கப்பட்டிருப்பவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பரிசோதனையில் செவனகலையை சேர்ந்த வெலிசறைகடற்படை வீரர் ஒருவரின் தந்தைக்கு கொரோனோ தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ஐ-110)

# 187 பேர் குணமடைவு....

பேரும், வெலிசறையிலுள்ள கடற்படை வைத்தியசாலையில் 135 பேரும், ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் 60 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, மேலும் 26 வைத்தியசாலைகளில் 137 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (அ, 22)

# குணமானார்....

கடந்த 25ஆம் திகதி கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட இவர் ஐ.டி.எச். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் தற்போது குணமடைந்து வீடு திரும்பியுள்ளார் என்றும், அவர் தொடர்ந்து 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுவார் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது. (எ)

# தனக்குத் தானே.....

ளைகளைப் பார்க்க முடியாத மன விரக்தியில் அவர் இருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது. சம்பவத்தில் செல்லத்துரை அன்ரனி (வயது 60) என்பவரே உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி, ஜெயபுரம் பகுதியில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்ற குடும்பத்தலைவர், ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதால், யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில் உள்ள அவரது வீட்டுக்குத் திரும்ப முடியாது அங்கேயே சிக்கிக்கொண்டார்.

இந்த நிலையிலேயே அவர் மண் எண்ணெயை ஊற்றி தனக்குதானே தீவைத்து எரிந்துள்ளார். தீயில் எரிந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ப-26)

# கட்டுக்குள் வருகிறது கொரோனா

கொழும்பு, மே 4

இலங்கையிலுள்ள அரச வைத்தியசாலைகளில் கடந்த வாரம் ஒரு கொரோனா நோயாளியேனும் அடையாளம் காணப்படவில்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் முகாம்களில் இருந்து இனங்காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

"நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. தற்போதைய நிலவரத்தின் படி கொரோனா வைரஸ் பரவியுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் நபர்களில் , நோய் பரவியவர்கள் அடையாளம் காணப்படும் வீதமும் நன்றாகவே குறைவடைந்துள்ளது" எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (க-44)

# மக்களுக்கு அச்சம் வேண்டாம்
# கட்டுப்பாட்டுக்குள் கொழும்பு

கொழும்பு, மே 4

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட கொழும்பின் நிலைமை தற்போது பூரண கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. அது தொடர்பில் வீண் அச்சம் தேவை இல்லை.

இவ்வாறு கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி விஷேட மருத்துவ நிபுணர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

கொழும்பு உட்பட அனைத்துப் பகுதிகளிலும் எதிர்வரும் 11ஆம் திகதி அன்றாட நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அரச, தனியார் நிறுவனங்களின் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொழும்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள தலைநகர் பகுதியில் மட்டும் 124 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால் கொரோனா தொற்று பரவலுக்கான குறைந்தபட்ச சாத்தியப்பாடுகளைக் கொண்ட பகுதிகள் என நம்பும் இடங்களை நாம் மூன்று இடங்களுக்குள் மட்டுப்படுத்தியுள்ளோம்.

தற்போது கொழும்பில், நாகலகம வீதி, பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் நாரஹேன்பிட்டி தாபரே மாவத்தை ஆகிய மூன்று பகுதிகளில் மட்டுமே கொரோனா பரவலுக்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.

அந்தப் பகுதிகளை நாம் தொடர்ந்து தனிமைப்படுத்தி கண்காணித்து வருகின்றோம். அந்த மூன்று பகுதிகளுக்கும் வெளியே தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை. அந்தப் பகுதிகளை அண்மித்துள்ள, அந்தப் பகுதி தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்கும் அனைவரையும் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளதால் தற்போதைய சூழலில் கொழும்பின் நிலை பூரண கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளிலும், ஏனைய பகுதிகளிலும் இனிமேலும் கொரோனா தொற்று பரவாது என்பதை நூற்றுக்கு நூறு வீதம் உறுதி செய்யும் விதமாக நாம் விசேட மாதிரிப் பரிசோதனைகள் ஊடான ஆய்வொன்றையும் முன்னெடுத்து வருகின்றோம்.- என்றார். (ப)

# சுகாதார முறைப்படி பொதுப் போக்குவரத்து

கொழும்பு, மே 4

ஊரடங்கு தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் சுகாதார முறைப்படி நடைபெற வேண்டும் என்று பொதுப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

பொதுப் போக்குவரத்தைச் செயற்படுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார முறைகள் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு அந்த அமைச்சு உலக சுகாதார அமைப்புக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஐ)



# வாகன விபத்தில் இருவர் காயம்

கொடிகாமம், மே 4

பட்டாரக வாகனம் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனமே விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

# நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை கிழக்கில் ஊக்குவிக்க வேண்டும்
## ஆளுநர் தெரிவிப்பு

மூதூர், மே 4

சௌபாக்கியா திட்டம் ஊடாகப் பல்வேறு நச்சுத்தன்மையற்ற உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

சௌபாக்கியா திட்டத்தின் கீழ் மாகாண விவசாயத் துறையை மேம்படுத்துவதற்காக அண்மையில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் 100 கிலோ உரத்தைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் மூன்று சிறப்பு மாதிரிப் பண்ணைகள் அமைக்கவும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

உள்ளூர் பயிர்களைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவிப்பதற்கும், மாகாணத்தின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கும் நச்சுத்தன்மையற்ற உர வகைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ப-40)



# 9 பன்றிகள் மீட்பு ஒருவர் கைது

மட்டக்களப்பு, மே 4

அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோதமான முறையில் இறைச்சிக்காகக் கொண்டு செல்லப்பட்ட பன்றிகள் மீட்கப்பட்டன என்றும், அவற்றை ஏற்றிச் சென்ற வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை காலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருந்து பொலனறுவைக்குக் கொண்டுவரப்பட்ட ஒன்பது பன்றிகள் இவ்வாறு மீட்கப்பட்டன. இவை உரிய அனுமதி பெறப்படாது கொண்டு வரப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப)



# சிறார்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு!

## ஊரடங்கு காலப்பகுதியில் 352 முறைப்பாடுகள்

கொடிகாமம்,மே 4

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில், சிறுவர்கள் மீதான கொடுமைகள் தொடர்பில் 352 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையகம் தெரிவித்துள்ளது.

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையகத்தின் 1929 எனும் துரித அழைப்பு எண் வழியாகவே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஆணையகத்தின் தலைவர் பேராசிரியர் முதித விதானபதிரன தெரிவித்தார்.

இதில், 152 முறைப்பாடுகள் குழந்தைகள் தங்கள் சொந்த வீடுகளில் உடல் மற்றும் உளவியல் கொடுமைகளுக்கு இலக்காகி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டமை தொடர்பானவை என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-159)



# அதிவேக வீதிக்காக ரூ.3,170 கோடி கடன்

கொழும்பு,மே 4

அதிவேக வீதி அமைப்புப் பணிகளுக்காக 3 ஆயிரத்து 170 கோடி ரூபா கடன் பெறுவதற்கு பெருந்தெருக்கள் அமைச்சுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் இதற்காகப் பெறப்படவுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய தொகையொன்றுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை சிக்கலுக்குரியது என்று முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

கொவிட் 19 நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள 17 இலட்சம் பேருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு 850 கோடி ரூபாவே செலவாகின்றது.

அப்பாவி மக்களுக்கு வழங்கப்படுகின்ற அந்தத் தொகையை விட நான்கு மடங்கு தொகையை அதிவேக வீதி ஒப்பந்தத்துக்கு திடீரென வழங்க முயற்சிக்கின்றனர். இது மிகப் பெரிய டீல். நாடாளுமன்றம் இருந்திருந்தால் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கும். நாடாளுமன்றத்தை மூடிவைத்து இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். என்றார்.

இதேவேளை, ஜனாதிபதி வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்றார். அதிவேக வீதி தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஊடகங்களுக்குத் தெளிவூட்ட வேண்டும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.(க)

# தவிசாளர் உட்பட 5 பேர் கைது




ஹற்றன்,மே 4

அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தவிசாளர் உட்பட ஐவர் மஸ்கெலியா மவுஸ்சாக்கலை சோதனைச் சாவடியில் வைத்து நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறி, அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். அக்குரஸ்ஸ பிரதேச சபைக்குச் சொந்தமான லொறி ஒன்றும், அதிலிருந்த சில பயணப் பொதிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்தும் தடை செய்யப்பட்டன.

இந்தநிலையில் அனுமதிப்பத்திரம் இன்றி மாவட்டம் விட்டு மாவட்டம் இவர்கள் வந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக ஹற்றன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.(ஐ)

# வெசாக் தினத்தன்று கைதிகள் சிலர் விடுவிப்பு

கொழும்பு, மே 4

குற்றக்கோவை தண்டனைச் சட்டத்துக்குட்பட்ட 33 குற்றச் செயல்களுக்கு புறம்பான குற்றச் செயல்கள் தொடர்பில் தண்டனை அனுபவித்து வரும் 65 வயதுக்கு மேற்பட்ட கைதிகளை விடுதலை செய்வதற்கு சிறைச்சாலைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் வியாழக்கிழமை 7 ஆம் திகதி வெசாக் போயா தினத்தன்று இந்தக் கைதிகளை விடுதலை செய்ய இருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் எம்.ஜி.டப்லியூ.தென்னகோன் தெரிவித்தார். அதைத்தவிர பிணை செலுத்த முடியாமல் இருக்கும் சிறு குற்றங்கள் புரிந்த கைதிகளையும் விடுதலை செய்ய இருப்பதுடன், இன்னும் சில கைதிகளுக்கு மன்னிப்புக்காலம் வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ப)

# பசு உரிமையாளருக்கு 50,000 ரூபா இழப்பீடு!

## கொலை செய்தவரை வழங்குமாறு மன்று உத்தரவு

முல்லைத்தீவு, மே 4

பசு மாட்டை வாளால் வெட்டிக் கொலை செய்தமைக்காக, மாட்டின் உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம்.

அயல் வீடொன்றுக்குச் சென்ற பசு மாடு ஒன்று அந்த வீட்டிலிருந்த நபரால் வெட்டிக் கொல்லப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் நேற்று நடந்திருந்தது. பசுவைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அந்த வீட்டிலிருந்த இளைஞர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் ப. பரஞ்சோதியிடம் முற்படுத்தப்பட்டார்.

விசாரணைகளை அடுத்து, பசுவின் உரிமையாளருக்கு இழப்பீடாக 50 ஆயிரம் ரூபாவை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். கைது செய்யப்பட்டவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஐ-19)

# சுகாதார நடைமுறைகளுடன் வவுனியாவில் மக்கள் நடமாட்டம்

வவுனியா, மே.4

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டபோது மக்கள் சுகாதார நடமுறைகளைப் பின்பற்றி, தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர்.

கடந்த 30ஆம் திகதி இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது. அதையடுத்து வவுனியா நகரில் மக்கள் தமது தேவைகளின் நிமித்தம் வருவதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

வவுனியா காமினி மகா வித்தியாலயம் மற்றும் தமிழ் மகா வித்தியாலயம், ஹறவப்பொத்தானை வீதிகளை அண்மித்த



பகுதிகளில் மரக்கறி வியாபாரங்களை மேற்கொள்வதற்கு மாவட்டச் செயலகம் மற்றும் நகர சபையால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. ஊரடங்குக் காலத்தில் விவசாயிகளிடமிருந்து மரக்கறிகள் மற்றும் பழங்களை கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகளைக் கமநல அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டமை காரணமாகவும் பொது மக்கள் தேவையின்றி வவுனியா நகருக்கு வருவது குறைக்கப்பட்டுள்ளது. இதேவேளை அனைத்து அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் பொதுமக்களின் சேவைக்காக திறந்திருந்ததுடன், வங்கிகள், நீதிமன்றம், வைத்தியசாலை மற்றும் வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் சமூக இடைவெளியை பேணுவதையும், முகக் கவசங்களை அணிந்து நடமாடுவதையும் அவதானிக்க முடிந்தது. (ப-110)

සමෘද්ධි සහන සේවාව
சமுர்த்தி நிவாரண சேவை
Samurdhi Relief Service

# 17,48,020 பேருக்கு 5,000 கொடுப்பனவு

கொழும்பு, மே 4

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலை அடுத்து இதுவரை 17 லட்சத்து 48 ஆயிரத்து 20 பேருக்கு 5 ஆயிரம் ரூபா சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று சமுர்த்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 8.05 பில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது என்று சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதற்காக 12.62 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்காக மற்றொரு குழுவும் இனங்காணப்பட்டுள்ளது என்றும், இந்தக் கொடுப்பனவுக்காகப் பலர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# 'பார்' உடைத்து மதுப் போத்தல்கள் திருட்டு

கொழும்பு, மே 4

திம்புள்ள பத்தன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை நகரில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையமொன்று இன்று அதிகாலை உடைக்கப்பட்டு, மதுபானப் போத்தல்கள் களவாடப்பட்டுள்ளன.

நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்கே தளர்த்தப்பட்டது. ஊரடங்கு அமுலில் இருந்த காலப்பகுதியிலேயே அதாவது அதிகாலை 1.30 மணியளவிலேயே குறித்த மதுபான விற்பனை நிலையம் உடைக்கப்பட்டுள்ளது. களவாடப்பட்ட மதுபானப் போத்தல்களை, பெட்டியில் போட்டுக்கொண்டு மதுபான சாலைக்கு அருகில் இருந்த குறுக்குவழியொன்றின் ஊடாக திருடர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

தப்பிச்செல்லும் போது அந்த வழியில் இருந்த வீடொன்றில் பொறுத்தப்பட்டிருந்த சி.சி.ரீவி கமராவில் அந்தக் காட்சிகள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. திருட்டில் ஈடுபட்ட நபர்களை கைது செய்வதற்கான தேடுதல் வேட்டையை திம்புள்ள பத்தன பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ப)

# 324 கடற்படையினருக்கு இதுவரை கொரோனா

கொழும்பு, மே 4

இலங்கையில், இதுவரை 324 கடற்படையினருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான 718 பேரில் 324 பேர் கடற்படையினராவர். நேற்று அடையாளம் காணப்பட்ட 13 பேரில் வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 11 கடற்படையினரும், அவர்களுடன் நெருங்கிப் பழகிய இருவரும் அடையாளங் காணப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)



# 1,169 பேர் கைது

கொழும்பு, மே 4

இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 169 பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த காலகட்டத்தில் 314 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க)

# ஊரடங்கு உள்ள வேளையிலேயே அ.அட்டை இலக்க நடைமுறை!

கொழும்பு, மே 4

தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தைப் பயன்படுத்தி வெளியில் செல்லும் திட்டமானது ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் மாத்திரமே நடைமுறையில் இருக்குமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

மக்கள் அநாவசியமாக ஒன்று கூடுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்துக்கு ஏற்ப வீடுகளில் இருந்து வெளிச்செல்வதற்கு வழங்கப்படும் அனுமதி, ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும் என அறியத் தரப்படுகின்றது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வீடுகளில் இருந்து வெளிச்செல்வதற்கு இது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

ஏதேனும் ஒரு பிரதேசம் அல்லது கிராமம் இடர் வலயமாக குறிப்பிடப்பட்டிருந்தால் அத்தகைய வலயங்களுக்குள் பிரவேசிக்கவோ அல்லது அங்கிருந்து வெளிச்செல்லவோ எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ளோர் இவ்வாறு தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தைப் பயன்படுத்தி தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

ஏனைய மாவட்டங்களில் உள்ளோர் ஊரடங்கு அமுலில் இல்லாத நேரத்தில் தேசிய அடையாள அட்டை நடைமுறையை பின்பற்றவேண்டிய அவசியம் இல்லை - என்றுள்ளது. (ப)

# ஊடகவியலாளர் கொலை விசாரணைகள் கிடப்பில்

## ஐ.ம.மு.அமைப்புச் செயலர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 4

2004ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட ஊடகவியளாளர் நடேசன் உட்பட அனைத்து தமிழ் பேசும் ஊடகவியளாளர்கள் தொடர்பான விசாரணைகள் எந்த மட்டத்தில் உள்ளன என்பது இதுவரை புரியாத புதிராகவே உள்ளது. வடக்கு மாகாணத்திலிருந்து நாடாளுமன்றம் வந்த 60க்கும் மேற்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடமும் இந்தப் பட்டியலைக் கையளித்திருந்தார்கள். ஆனால் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் அமைப்புச் செயலாளரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான கலாநிதி வி.ஜனகன் தெரிவித்துள்ளார். ஊடக சுதந்திர தினமான நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் எந்தவித பொருளாதார நிவாரணங்களற்று நிர்க்கதியாக உள்ளார்கள். போர்க் காலங்களில் முடக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் அரசியல் பாதை மற்றும் அது தொடர்பான அறிவை வழிநடத்தக்கூடியது இந்த ஊடகங்கள் தான். ஆனால் கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ் ஊடகங்கள் மீதும் ஊடகவியாளர்கள் மீதுமான அரச அழுத்தங்கள் தமிழ் சமூகத்தின் அரசியல் வளர்ச்சியைக் கேள்விக் குறியாக்கி உள்ளது. ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறையைப் பாதுகாத்து மக்கள் மத்தியில் அதற்கான தேவையையும் மதிப்பையும் ஏற்படுத்த வேண்டியது ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளும் பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம் - என்றுள்ளது. (ப)

# கிழக்கு ஆளுநருக்கு புதிய செயலாளர்

மூதூர், மே 4

கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநரின் செயலாளராக பிரசன்னா மதனநாயக்க பொறுப்பேற்றார். இந்த நியமனத்தை கிழக்கு ஆளுநர் அநுராதா யஹம்பத் ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கியுள்ளார்.

மதானநாயக்க பேரதெனிய பல்கலைக்கழகத்தில் அறிவியல் இளங்கலைப் பட்டமும், ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் நிர்வாகத்தில் இளங்கலை பட்டமும், களனி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டமும் பெற்றவராவார். பொது நிர்வாகத்தைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டில் அநுராதபுரத்தில் உள்ள ஹோரோபத்தானாவின் உதவிச் செயலாளராக பொது சேவையில் சேர்ந்த அவர் 2013 ஆம் ஆண்டில் அநுராதபுரத்தின் மேலதிக செயலராகக் கடமைகளை ஏற்றுக்கொண்டார், 2017 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டச் செயலராகப் பணியாற்றியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# தொற்று நீக்கியை விஞ்ஞான பூர்வமாகப் பயன்படுத்துங்கள்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொடிகாமம், மே 4

கொரோனா கட்டுப்பாட்டுக்குப் பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகளை விஞ்ஞானபூர்வமாகப் பயன்படுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது

தனிநபரின் சுகாதாரம் தொடர்பில் மிகச்சிறந்த காரியங்களை சமூகத்துக்கு அளிக்கும், இவ்வேளையில் எல்லை கடந்து செயற்படுவதால் மனிதருக்கும் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாமல் செயற்படுவதும் எமது பொறுப்பாகும். அதிகளவில் முழுச் சுற்றாடலிலும் கிருமிநாசினிகளைப் பாவிப்பது இங்கு அவசியமற்றது என்பதுடன் இரசாயனப் பொருள்கள் பெருமளவில் இயற்கைச் சூழலுக்கு வெளிவிடப்படுவதனால் நோயிலிருந்து நிவாரணம் பெறும் வீதத்தைவிட சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் சூழலில் வாழும் மிருகங்களும் ஏற்படும் பாதிப்பு அதிகமாகும்.

கிருமிநாசினி தெளிக்கும் கூடாரத்தைப் பாவிப்பது அல்லது வேறு ஏதாவது முறையில் மனிதர்கள் மீது அல்லது சுற்றுச்சூழல் மீது கிருமி நாசினித் திரவங்களை விசிறுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அதனால் உடலினுள் வாழும் கிருமிகள் வெளியேறுவதோ நோய் குணமடைவதோ ஏற்படாது என்பதுடன் இச்செயலால் நபர்களின் நுரையீரல்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதுடன் மேலும் நோய் தீவிரமடையவும் கூடும். நுண்ணுயிர் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களின் சங்கம், சுகாதார அமைச்சின் சுற்றாடல் மற்றும் தொழிற் சுகாதார மற்றும் உணவு பாதுகாப்பு பிரிவினரினால் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு ஏற்ப, இந்த நோய் பரவலில் இருந்து தடுப்பதற்குச் செய்ய வேண்டியது மக்கள் அதிகமாக பயன்படுத்தும் மேற்பரப்பு மற்றும் வெளிப்பரப்புகளில் கிருமி நாசினிகளைப் பயன்படுத்தலாகும். அதிகளவில் இரசாயனங்களை தெளிப்பதனால் மட்டும் இது உரியவாறு நடைபெறுவதில்லை என்பதுடன் இதற்காக இம்மேற்பரப்புகள் திரவ கிருமிநாசினிகளால் துடைத்து அகற்றப்படல் வேண்டும். நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக மிகவும் முக்கியமானது தமது இரு கைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்வது, மூக்கு, கண் மற்றும் வாய் என்பவற்றை அடிக்கடி தொடாதிருப்பது, காய்ச்சல், தடிமல் நோய் அறிகுறி இருந்தால் வீட்டின் உள்ளேயே இருந்து அவசியமான அறிவுரைகளை சுகாதார பிரிவினரிடம் இருந்து பெறுவது மற்றும் தனிநபர் தூர இடைவெளியைப் பேணிக் கொள்வதுமாகும் -என்றுள்ளது. (ஐ-159)



# இலங்கையின் 208 மாணவர் லண்டனிலிருந்து மீண்டனர்

கொழும்பு, மே 4

லண்டனில் இருந்து 208 இலங்கையர்கள் விசேட விமானம் மூலம் இன்று காலை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

குறித்த 208 இலங்கையர்களும் நேற்றுமுன்தினம் இரவு லண்டனில் இருந்து அழைத்து வரப்பட்டனர். ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அந்த மாணவர்களில் ஒரு தொகுதியினர் கிருமி நீக்கம் செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து வருவோர் அவர்களின் வசதிகளுக்கேற்ப சில ஹோட்டல்களில் தங்கி தனிமைப்படுத்திக் கொள்ளலாம் என இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அரசு அல்லது இராணுவத் தலையீடு இன்றி நேரடியாகவே அவர்கள் ஹோட்டல்களுக்கான கட்டணத்தைச் செலுத்தி தங்கிக் கொள்ளலாம் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (ப)

# கூட்டுறவு பணியாளருக்கும் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 4

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலத்தில் மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அதற்கான மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு சங்கங்களின் நிர்வாகங்களும் அதற்கான தீர்மானங்களை மேற்கொண்டு ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலத்தில் பணியாற்றிய பணியாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்தது.

ஊரடங்குச் சட்டத்துக்கு மத்தியில் கூட்டுறவுச் சங்கங்கள் திறக்கப்பட்டு அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டும் வந்தன. அனேகமான கிளை நிலையங்கள் ஊடாக மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் நிவாரண விநியோகம் என்பன இடம்பெற்றும் வருகின்றன. இதே சமயம் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலத்தில் பணியாற்றிய பணியாளர்களுக்கு சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த வாரத்தில் அதற்கான கொடுப்பனவுகளையும் வழங்கி வைக்கவுள்ளது. (ஐ-17)

# கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விற்பனை!

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு மக்கள் கடைகளில் பருப்பு, ரின் மீன் உட்பட மற்றும் சில அத்தியாவசியப் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம், திக்கம், மந்திகை, ஏழாலை, வடமராட்சி கிழக்குப் போன்ற இடங்களில் உள்ள கூட்டுறவு மக்கள் கடைகளில் அத்தியாவசியப் பொருள்களைக் கட்டுப்பாடுகள் இன்றி தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடியும். பருப்பு கிலோ 65 ரூபா, ரின் மீன் நூறு ரூபா, சீனி 117 ரூபா, கோதுமை மா 85 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலையில் மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்று மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. கூட்டுறவு மக்கள் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விநியோகித்து வருகின்றது. (க-17)



# குருதிக் கொடை

மட்டக்களப்பு, மே 4

மட்டக்களப்பு போதனா மருத்துவமனை குருதி வங்கியில் காணப்பட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. நிகழ்வுக்கு சட்டத்தரணி நவரெத்தினராசா கமலதாசன் முழு அனுசரனையை வழங்கினார். (ப-150)

# ரூ. 5 ஆயிரம் இல்லையேல் ஒருநாள் வேலை நிறுத்தம்

## வடக்கு கூட்டுறவு பணியாளர்கள் முடிவு

யாழ்ப்பாணம், மே 4

அரசால் வழங்கப்பட்டு வரும் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவை வடக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்க தவறும் பட்சத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பதற்கு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் முயற்சித்து வருகின்றது.

இது குறித்து வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் தலைவர் செ.பாலேந்திரன் தெரிவித்ததாவது;

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பெரும்பாலான பகுதியில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிவாரணங்கள் என்பனவற்றை அரசாங்கமும் மற்றும் தொண்டு நிறுவனங்களும் வழங்கி வருகின்றனர். வடக்கு மாகாணத்தில் மிகவும் குறைந்த மாதச் சம்பளத்துடன் ஊரடங்குச் சட்டத்தையும் பாராது மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டு வரும் கூட்டுறவு பணியாளர்கள் இந்த நிவாரணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். மிகவும் குறைந்த வேதனத்தை பெற்று வரும் இந்தப் பணியாளர்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுத் தருமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தோம். எமது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் வடக்கு மாகாண கூட்டுறவாளர்கள் ஒன்று சேர்ந்து ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவும் தயாராகி வருகின்றோம்- என்றார். (ப-17)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 04.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.